பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

27 10 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சுயசார்பு இந்தியா இயக்கம் அனைத்துத்துறைகளிலும் புதிய சாதனைகளை படைக்க உத்வேகம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
2. நாட்டின் வளர்ச்சியில் இந்திய விண்வெளித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.
3. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. உலகின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ ரயில் சேவையை கொண்டுள்ள நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் கூறியுள்ளார்.
5. ஜப்பான் சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சுகந்த் கடம் தங்கப்பதக்கம் வென்றார்.

<u>இனி விரிவான செய்திகள் ----</u>

**<<<<<<>>>>>**

சுயசார்பு இந்தியா இயக்கம் அனைத்துத்துறைகளிலும் புதிய சாதனைகளை படைக்க உத்வேகம் அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் அவர் இவ்வாறு கூறினார்.

*<u>(சவுண்ட் பைட் - பிரதமர் - - 85 செகண்ட்ஸ்)</u>*

நாட்டின் கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் அனிமேஷன் துறையில் இளைஞர்கள் சாதனை படைத்து வருவதாக அவர் தெரிவித்தார்.
டிஜிட்டல் பாதுகாப்பின் மூன்று முக்கிய அம்சங்கள் குறித்து இளைஞர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று பிரதமர் வலியுறுத்தினார்.

இணையதள மோசடிக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் மாணவர்கள் அதிக அளவில் ஈடுபட வேண்டும் என்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் இலக்கியங்கள் மற்றும் கலைகள் பிற நாடுகள் உடனான கலாச்சாரத்திற்கான பாலமாக திகழ்கிறது என்று அவர் கூறினார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் பகவான் பிர்ஸா முண்டாவின் 150-வது பிறந்த தின கொண்டாட்டங்களை தேசிய அளவில் கொண்டாட முடிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்த தினத்தை முன்னிட்டு, ஆண்டுதோறும் நடைபெறும் ஒற்றுமை ஓட்டம், இந்த ஆண்டு தீபாவளி பண்டிகை காரணமாக, வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

தீபாவளி உள்ளிட்ட பல்வேறு பண்டிகைகள் கொண்டாடப்படுவதை ஒட்டி, நாட்டு மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்ட பிரதமர் உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்பதை இந்த கொண்டாட்டத்தின் போது நினைவில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சியில் இந்திய விண்வெளித்துறை முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்துள்ள பேட்டியில், விண்வெளித்துறையின் மேம்பாட்டிற்காக ஆயிரம் கோடி ரூபாய் மூலதன நிதியாக வழங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

உயிரி பொருளாதாரத்தை உருவாக்கும் வகையில், கொள்கைகள் வகுக்கப்படும் என்று திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தீவிரவாதத்தை ஒடுக்கும் நடவடிக்கைகளில் எவ்வித சமசரத்திற்கும் இடமில்லை என்று உறுதிபட கூறினார்.

ரஷ்யா – உக்ரைன் மற்றும் இஸ்ரேல் - ஈரான் நாடுகளுக்கு இடையேயான போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளுக்கு இந்தியா ஆதரவு அளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு மத்திய – மாநில அரசுகள் இணைந்து செயலாற்ற வேண்டியதன் அவசியத்தை திரு ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

நாட்டின் உள்கட்டமைப்பு நடவடிக்கைகள் அனைத்துத்துறையின் மேம்பாட்டிற்கு உத்வேகம் அளிக்கும் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

மேற்குவங்க மாநிலம் **Petrapole** –ல் 487 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய பயணியர் முனைய கட்டிடத்தை இன்று அவர் திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர், எல்லைப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்புப்பணிகள் அண்டை நாடுகள் உடனான உறவை மேம்படுத்துவதுடன், மொழி, கலாச்சாரம், இலக்கியம் போன்றவற்றை பரஸ்பரம் பரிமாறிக்கொள்வதற்கும் உதவிடும் என்று கூறினார்.

<<<<<<>>>>>

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், கிராமப்புற வேலைவாய்ப்புகள் 16 சதவீதம் குறைந்துள்ளதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்திகளை அந்த அமைச்சகம் நிராகரித்துள்ளது.

நடப்பாண்டின் முதல் அரையாண்டு காலத்திற்கான தரவுகளை கொண்டு, அதன் எண்ணிக்கையை நிர்ணயிக்க முடியாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

உலகின் இரண்டாவது மிகப்பெரிய மெட்ரோ ரயில் சேவையை கொண்டுள்ள நாடாக இந்தியா திகழ்கிறது என்று மத்திய வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு மனோகர் லால் கட்டார் தெரிவித்துள்ளார்.

குஜராத் மாநிலம் காந்தி நகரில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், நீடித்த பொது போக்குவரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

ஒருங்கிணைந்த நகர்ப்புற போக்குவரத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் நாடு முழுவதும் 725 கிலோமீட்டர் தொலைவுக்கான மெட்ரோ ரயில் சேவைகள் செயல்பாட்டில் உள்ளதாகவும், மேலும் தொள்ளாயிரத்து 74 கிலோமீட்டர் தொலைவுக்கான மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தில்லியில் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்துள்ளதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மாசு கட்டுப்பாட்டு வாரியம் வெளியிட்டுள்ள அறிக்கையில், காற்றின் தரக்குறியீடு இன்று 360-ஆக இருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

பாகிஸ்தானிலிருந்து கடத்தி வரப்பட்ட 105 கிலோ போதைப்பொருளை பஞ்சாப் மாநில காவல்துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக, இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில காவல்துறை தலைவர் திரு கௌரவ் யாதவ் தெரிவித்துள்ளார்.

காவல்துறையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது இந்த போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஜப்பான் சர்வதேச பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சுகந்த் கடம் தங்கப்பதக்கம் வென்றார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-12, 21-10 என்ற செட் கணக்கில் சக வீரரான தருணை வென்றார்.

-------------

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் 260 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 24.5 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 100 ரன் எடுத்துள்ளது.
அஹமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்த நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 259 ரன் எடுத்தது.

மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதல் ஆட்டத்தில் வெற்றிபெற்று, இந்தியா முன்னிலை பெற்றுள்ளது.

----

இத்தாலியில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில், இந்தியாவின் **'Yashaswini Ghorpade – Krittwika Roy** இணை, தென்கொரியா இணையை இன்று எதிர்கொள்கிறது.

**<<<<<<END>>>>>**